**சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை: திரு. எம். சண்முக கனி, பி.ஏ., எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, மானாமதுரை**
**2026ம் வருடம் மார்ச் மாதம் 16ம் நாள் திங்கட்கிழமை**
**இடைக்கால மனு எண்.1/2024**
**இன்**
**அசல் வழக்கு எண்.8/2008**

அ. காஜாமுகைதீன் ...மனுதாரர்/1ம்வாதி

..எதிர்..

1. க. ரஹ்மத் பீவி
2. மு.பானுபரிதா ...1, 2 எதிர்மனுதாரர்கள்/ 2, 3 வாதிகள்

3. மு.ரகுமத்பீவி
4. மு.முகம்மது ஹக்கீம்
5. அ.கமரி ஆமினாள்
6. மு.துல்புகார் அலி
7. அ. செய்யது அலிபாத்திமா
8. அ.முகம்மது இஸ்மாயில்
9. அ.காதர்கனி ...3 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இந்த மனுவானது, இறுதி விசாரணைக்காக 02.03.2026-ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்த போது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. ஜெராமன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் செல்வி V.அனுசூர்யா அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. குரு.முருகானந்தம் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:-

**<u>இறுதி நிலை தீர்ப்பாணை</u>**

இந்த மனு மனுதார் தரப்பில் கட்டளை 26 விதி 13 சிபிசி படி தாவா சொத்தில் முதல் நிலை தீர்ப்பாணையில் கண்டபடி இந்த மனுதாரருக்குரிய 2/10 பங்கை நயமிடர் பார்த்து பிரிவினை செய்து இறுதி நிலை தீர்ப்பாணை பெற ஏதுவாக ஒரு வழக்கறிஞரை ஆணையராக நியமித்து அறிக்கையும் வரைபடமும் தாக்கல் செய்ய உத்திரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்:**

இந்த மனுதாரர் மற்றும் 1, 2 எதிர்மனுதார்கள் தரப்பில் 3 முதல் 9 எதிர்மனுதாரர்கள் மீது பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து முதல் நிலைத் தீர்ப்பாணை ஏற்பட்டிருந்தது என்றும் இந்த 1, 2 எதிர்மனுதாரர்கள் மனுதாரரை புறக்கணித்து விட்டு, இந்த மனுதாரரை 1ம் எதிர்மனுதாரராக குறிப்பிட்டு, இறுதிநிலைத் தீர்ப்பாணை மனு தாக்கல் செய்து, உத்தரவு பெற்றுள்ளார்கள் என்றும் மேற்படி இறுதிநிலைத் தீர்ப்பாணை மனுவில் இந்த மனுதாரர் தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்து முதல்நிலை தீர்ப்பாணைப் படி 10ல் 2 பாகத்தை நயமிடர் பார்த்து பிரித்து தர கோரியிருந்ததில், மனுதாரருக்குரிய பாகத்தை பிரித்துக்கொடுக்காமல் பிரிதொரு மனுத்தாக்கல் செய்து கொள்ளலாம் என்று அனுமதியளித்து 1, 2 எதிர்மனுதார்களுக்கு மட்டும் இறுதிநிலை தீர்ப்பாணை ஏற்பட்டுள்ளது என்றும் இந்த மனுதாரரும் அசல் வழக்கில் கோரியுள்ள தனக்குரிய பாகச் சொத்திற்குரிய நீதிமன்ற கட்டணத்தைச் செலுத்தியுள்ளதின் பேரில், 10ல் 2 பாகம் கொடுக்க முதல் நிலை தீர்ப்பாணை ஏற்பட்டுள்ளது என்றும் எனவே முதல் நிலைத் தீர்ப்பாணையில் கண்டபடி மனுதாரருக்கு 2/10 பங்கை நயமிடர் பார்த்து பிரிவினை செய்து இறுதிநிலைத் தீர்ப்பாணை பெற ஏதுவாக ஒரு வழக்கறிஞரை ஆணையாளராக நியமித்து வரைபடங்களும், அறிக்கையும்

தாக்கல் செய்ய உத்தரவு பிறப்புவிக்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**3)** 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இந்த மனுவிற்கு எதிர்உரை இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

**4) 4ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 3, 5 முதல் 9 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:**

மனுவில் கண்ட சங்கதிகள் இந்த எதிர்மனுதாரர்களால் மறுக்கப்படுகிறது என்றும் அசல் வழக்கில் ஏற்பட்ட முதல் நிலை தீர்ப்பாணையின் மீது இந்த மனுவில் கண்ட 1, 2 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் 10.11.2022 ல் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையில் ஏற்பட்ட ஒருதலைப்பட்ச உத்திரவை ரத்து செய்ய இந்த எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதன் பேரில் இந்த எதிர்மனுதாரர்கள் மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த CMA No. 345/2024 மற்றும் CMA No. 402/2024 ஆகியவை நிலுவையில் உள்ளது என்றும் மேற்படி பல்வகை மேல்முறையீட்டு மனுக்களில் தீர்வு கண்ட பின்பு தான் இந்த மனுவை மேல்நடத்த இயலும் என்றும் ஏற்கனவே இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விபரம் தெரிந்து இந்த மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்ய சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளார் என்றும் இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றும் கூறப்பட்டுள்ளது.

**5)** இருதரப்பும் பரிசீலிக்கப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கில் ஏற்பட்ட முதல் நிலை தீர்ப்பாணையின் மீது இந்த மனுவில் கண்ட 1, 2 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த இறுதிநிலை தீர்ப்பாணை மனுவில் 10.11.2022 ல் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையில் ஏற்பட்ட ஒருதலைப்பட்ச உத்திரவை ரத்து செய்ய இந்த எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதன் பேரில் இந்த எதிர்மனுதாரர்கள் மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த CMA No. 345/2024 மற்றும் CMA No. 402/2024 ஆகியவை நிலுவையில் உள்ளது என்றும் மேற்படி பல்வகை மேல்முறையீட்டு மனுக்களில் தீர்வு கண்ட பின்பு தான் இந்த மனுவை மேல்நடத்த இயலும் என்றும் ஏற்கனவே இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விபரம் தெரிந்து இந்த மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்ய சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர் தரப்பில், இந்த 1, 2 எதிர்மனுதாரர்கள் மனுதாரரை புறக்கணித்து விட்டு, இந்த மனுதாரரை 1ம் எதிர்மனுதாரராக குறிப்பிட்டு, இறுதிநிலைத் தீர்ப்பாணை மனு தாக்கல் செய்து, உத்தரவு பெற்றுள்ளார்கள் என்றும் மேற்படி இறுதிநிலைத் தீர்ப்பாணை மனுவில் இந்த மனுதாரர் தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்து முதல்நிலை தீர்ப்பாணைப் படி 10ல் 2 பாகத்தை நயமிடர் பார்த்து பிரித்து தர கோரியிருந்ததில், மனுதாரருக்குரிய பாகத்தை பிரித்துக்கொடுக்காமல் பிரிதொரு மனுத்தாக்கல் செய்து கொள்ளலாம் என்று அனுமதியளித்து 1, 2 எதிர்மனுதார்களுக்கு மட்டும் இறுதிநிலை தீர்ப்பாணை ஏற்பட்டுள்ளது என்றும் இந்த மனுதாரரும் அசல் வழக்கில் கோரியுள்ள தனக்குரிய பாகச் சொத்திற்குரிய நீதி மன்ற கட்டணத்தைச் செலுத்தியுள்ளதின் பேரில், 10ல் 2 பாகம் கொடுக்க முதல் நிலை தீர்ப்பாணை ஏற்பட்டுள்ளது என்றும் எனவே முதல் நிலைத் தீர்ப்பாணையில் கண்டபடி மனுதாரருக்கு 2/10 பங்கை

நயமிடர் பார்த்து பிரிவினை செய்து இறுதிநிலைத் தீர்ப்பாணை பெற ஏதுவாக ஒரு வழக்கறிஞரை ஆணையராக நியமித்து வரைபடங்களும், அறிக்கையும் தாக்கல் செய்ய உத்தரவு பிறப்புவிக்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு இந்த மனுவை பரிசீலனை செய்து பார்க்கின்ற போது, முதல்நிலை தீர்ப்பாணையை அனுசரித்து அதனடிப்படையில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க ஏதுவாக ஆணையர் நியமனம் செய்து உத்திரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருகிறது. மேலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் இந்த அசல் வழக்கில் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட முதல்நிலை தீர்ப்பாணையை ரத்து செய்ய தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதன் பேரில் அந்த உத்திரவின் மீது மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் பல்வகை மேல்முறையீட்டு மனுக்கள் நிலுவையில் உள்ளதாக கூறப்பட்டுள்ள போதிலும் தடை உத்திரவு ஏதும் இருப்பதாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்படவில்லை. மேலும் அசல் வழக்கில் ஏற்பட்ட முதல் நிலை தீர்ப்பாணையின் மீது மேல்முறையீடு ஏதும் நிலுவையில் இருப்பதாகவும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்படவில்லை. இந்நிலையில் ஆணையர் நியமனம் செய்து உத்திரவிடுவதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. வழக்கறிஞர் திரு. M.லிங்கேஷ்வரன் அவர்கள் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்படுகிறார். அவரது ஊதியம் ரூ.8,000/- என நிர்ணயம் செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையருக்கான ஊதியத்தை மனுச்சொத்துக்களை அளவீடு செய்யும் நாளன்று நேரடியாக நீதிமன்ற ஆணையரிடம் மனுதாரர் தரப்பு வழங்க வேண்டுமென்றும், நீதிமன்ற ஆணையர் இரு தரப்பிற்கும் உரிய அறிவிப்பு கொடுத்துவிட்டு முதல் நிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் மனுச்சொத்துக்களை பார்வையிட்டு, அளவீடு செய்து மாதிரி வரைபடத்துடன்

அறிக்கை தாக்கல் செய்ய உத்திரவிடப்படுகிறது. அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வாய்தா 03.06.2026

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணிணியில் அடிக்கப்பட்டு, பின் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 16ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

SHUNMUGA KANI

Digitally signed by SHUNMUGA KANI
Date: 2026.03.16 14:07:37 +0500

சார்பு நீதிபதி,
மானாமதுரை

மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

3 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

SHUNMUGA KANI

Digitally signed by SHUNMUGA KANI
Date: 2026.03.16 14:07:45 +0500

சார்பு நீதிபதி,
மானாமதுரை.